ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2079/67 - 2018 ජූලි මස 12 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.07.12

*2079/67 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## *பகுதி IV(அ) - மாகாண சபைகள்*

### *மாகாண சபை அறிவித்தல்கள்*

**மேல் மாகாண மாகாண சபை**

*மேல் மாகாண மாகாண சபையின் மீன்பிடி மற்றும் நீரியல்வள நியதிச்சட்ட வரைவு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.*

*காமினி திலகசிறி,*
*மேல் மாகாண விவசாய, காணி, நீர்ப்பாசனம், மீன்பிடி,*
*கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரம் மற்றும்*
*கமநல அபிவிருத்தி அமைச்சர்.*

*மேல் மாகாண விவசாய, காணி, நீர்ப்பாசனம், மீன்பிடி, கால்நடை உற்பத்தி*
*மற்றும் சுகாதாரம் மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சு,*
*"சிராவஸ்தி இல்லம்",*
*புனித மார்க்கஸ் பிரணாந்து மாவத்தை,*
*கொழும்பு 07,*
*2018, யூன் 20.*

***2018 ஆம் ஆண்டின் ......................... ஆம் இலக்க மேல் மாகாணத்தின் மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை நியதிச் சட்டம்***

*மேல் மாகாணத்தின் கடற்பகுதிகளில் மற்றும் உள்நாட்டு நீர்த்தேக்கங்களில் மீன்பிடிக் கைத்தொழிலினை ஒழுங்காக முகாமைத்துவம் செய்வதற்காகவும், மேல் மாகாணத்தில் கடற்றொழிலாளர்களின் சமூக நலன்புரிக்கு நடவடிக்கை எடுப்பதற்காகவும், மேல் மாகாணத்தின் நுகர்வோர்களான மக்களுக்கு நீதியான விலையில், மீன் மற்றும் அதனோடு இணைந்த உற்பத்திகளை விற்பதற்காகவும், அவ்விடயங்களைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு மாகாண மீன்பிடிப் பணிப்பாளர் பதவி ஒன்றினை ஸ்தாபிப்பதற்கும், மாகாணத்தில் கடற்றொழில் நடவடிக்கையினைப் பேணிச் செல்வதற்காகவும் ஆலோசனைச் சபை ஒன்றினை நியமிப்பதற்காகவும் அது தொடர்பாக, அல்லது அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான ஏற்பாடுகளை ஏற்படுத்துவதற்குரிய நியதிச்சட்டம் ஒன்றாகும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*குறுந் தலைப்பும் நடைமுறைக்கு வரும் தினமும்.*

*1. இந்நியதிச் சட்டம் 2018 ஆம் ஆண்டின் .................. ஆம் இலக்க மேல் மாகாணத்தின் மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை நியதிச் சட்டம் என அழைக்கப்படுவதுடன், மேல் மாகாணத்தின் ஆளுநரினால் தமது அங்கீகாரம் வழங்கும் தினத்தில் இருந்து நடைமுறைக்கு வரவேண்டும்.*


*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## பகுதி I

### மேல் மாகாணத்தின் மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினை நிறுவுதல்

*மேல் மாகாணத்தின் மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினை நிறுவுதல்*

*2.* (இந்நியதிச் சட்டத்தின் இதனகத்துப் பின்னர் பணிப்பாளர் என அழைக்கப்படும்) மேல் மாகாணத்தின் மீன்பிடிப் பணிப்பாளர் என அழைக்கப்படும்) பதவி ஒன்று இந்நியதிச் சட்டத்தின் 4 ஆவது பிரிவில் குறிப்பாகக் குறிப்பிடப்படும் விடயங்களை மேற்கொள்வதற்காக ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

*மாகாண மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை பணிப்பாளரை நியமித்தல்.*

*3.* (1) பணிப்பாளர் மேல் மாகாண மீன்பிடித் திணைக்களத்தின் தலைவராக வேண்டும்.

(2) செயலாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் பணிப்பாளர், இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

(3) இந்நியதிச் சட்டத்தின் விடயங்களை மேற்கொள்வதற்குத் தேவையான பிரதி மீன்பிடிப் பணிப்பாளர் அத்துடன் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களுக்குப் பொறுப்பாக செயற்படுவதற்காக உதவி மீன்பிடிப் பணிப்பாளர்கள் மூன்று பேர் மற்றும் ஏனைய தேவையான எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் இந்நியதிச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்படலாம்.

(4) இந்நியதிச் சட்டத்தின்கீழ் தமக்கு கையளிக்கப்பட்ட எந்த ஒரு அதிகாரத்தினையும் பணிப்பாளரானவர், பிரதிப் பணிப்பாளருக்கு, உதவிப் பணிப்பாளருக்கு அல்லது பிற அலுவலர் ஒருவருக்கு கையளிக்க இயலும்.

(5) பணிப்பாளர் உள்ளிட்ட ஏனைய அலுவலர்களின் நியமனம் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 32 ஆம் பிரிவிற்கு இணங்கியதாக வேண்டும்.

*மீன்பிடிப் பணிப்பாளரின் விடயங்கள்.*

*4.* மாகாண மீன்பிடிப் பணிப்பாளரினால் பிற ஏதாவது எழுத்து மூலமான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்கீழ் பின்வரும் அடிப்படைப் பொறுப்புக்களை மேற்கொள்ள வேண்டும். அவை யாவன :-

(1) மேல் மாகாணத்தின் கடற்பகுதிகளில் மற்றும் உள்நாட்டு நீர்த்தேக்கங்களில் மீன்பிடிக் கைத்தொழிலினை ஒழுங்காகவும் சுகாதாரம் மிக்கதாகவும் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் ;

(2) மேல் மாகாணத்தில் கடற்றொழிலாளர்களின் தொழில் மற்றும் சமூக நலன்புரிக்கு நடவடிக்கை எடுத்தல் ;

(3) மேல் மாகாணத்தின் நுகர்வோர்களான மக்களுக்கு தேவையான அளவு, மீன் உற்பத்தியினை நியாயமான விலையில் பெற்றுக்கொடுக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் ;

(4) மேல் மாகாணத்தில் கடற்றொழிலாளர்களின் வருமானத்தினை அதிகரிக்கும் நோக்கில் மாகாணத்தினுள் மீன் உற்பத்தியினை அதிகரிப்பதற்காக சரியான வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல்.

(5) மேல் மாகாணத்தின் மீன் உற்பத்தியின்போது சுகாதார ரீதியிலும், தரத்திற்குமான முறையில், ஐஸ் பாவனை மற்றும் குளிரூட்டி பாவனை தொடர்பாக மீனவ சமூகத்தினை அறிவுறுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.

(6) உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் கேள்வி காணப்படும் உயர் தரமான மீன் மற்றும் அலங்கார மீன்களின் உற்பத்திக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் அதற்காக பொருத்தமான சந்தைகளை அறிமுகப்படுத்துதல்.

(7) மேல் மாகாணத்தினுள் வளர்ப்பு மீன்களை உற்பத்தி செய்தல், வீட்டிணைந்த மீன் உற்பத்தியினை சுயதொழில் மார்க்கம் ஒன்றாக விஸ்தரித்தல்.

(8) ஆகக்குறைந்தது மேல் மாகாணத்தின் ஒவ்வொரு பிரதான நகரங்களிலும் நவீன அத்துடன் சுகாதார ரீதியிலான மீன் விற்பனை நிலையங்களைப் பேணிச் செல்லுதல், மீன்களைக் கொண்டுவரும் கடற்கரைகள் மற்றும் மீன்களைக் கொண்டுவரும் படகுகளுக்கு ஐஸ் மற்றும் குளிரூட்டி பாவனைக்காக வசதிகளை ஏற்படுத்துதல்.

(9) மேல் மாகாணத்தில் நீரியல் சூழல் மற்றும் நீர்வாழ் வளங்கள் அத்துடன் உள்ளூர் மீன் இனங்களைப் பாதுகாத்தல்.

(10) மேல் மாகாணத்தில் மீன்பிடி தொழில் துறையில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் தொழில்முறை மற்றும் ஏனைய உரிமைகளைப் பாதுகாக்க திட்டங்களை உருவாக்குதல்.

(11) தனியார்துறை பங்கேற்பு மற்றும் சமூக பங்கேற்புடன் மீன் வளர்ப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை ஏற்படுத்துதல்.

(12) வாவிகளோடு இணைந்த இறால் வளர்ப்பு பண்ணைகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் இதர வசதிகளை வழங்குதல்.

(13) நகரப்புற பகுதிகளில் நன்னீர் மீன் நுகர்வினை அதிகரிப்பதற்காக நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(14) மீன் இனப்பெருக்க மையங்களை நிறுவுவதன் மூலம் தேவையான மீன் குஞ்சுகள் கிடைப்பதை சுலபமாக்குதல்.

(15) கடற்றொழில் துறையில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்குத் தேவையான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(16) மேல் மாகாணத்தில் மீனவர்களுக்குப் பொருத்தமான காப்புறுதித் திட்டத்தை அறிமுகப் படுத்துதல் ;

(17) நீர்வாழ் உயிர்கள் அபிவிருத்தி அதிகார சபை, தேசிய நீரியியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் தாபனம் ஆகிய தாபனங்களுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக மீனவ சமூகத்திற்குத் தேவையான உதவிச் சேவைகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.

## பகுதி II

### மீன்பிடி மற்றும் நீரியியல் வள ஆலோசனைச் சபை

மேல் மாகாணத்தின் மீன்பிடி மற்றும் நீரியல் வள ஆலோசனைச் சபையை அமைத்தல்.

5. அமைச்சரினால் (இதனகத்துப் பின் ''ஆலோசனைச் சபை'' என அழைக்கப்படும்) மேல் மாகாணத்தின் மீன்பிடி மற்றும் நீரியல் வள ஆலோசனைச் சபை என்று அழைக்கப்படும். மீன்பிடி மற்றும் நீரியல் வள ஆலோசனைச் சபை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

ஆலோசனைச் சபை அமைப்பு.

6. (i) ஆலோசனைச் சபை பின்வரும் அங்கத்தவர்களைக் கொண்டு இருத்தல் வேண்டும் :

(1) மீன்பிடி தொழில் தொடர்பாக நிபுணத்துவம் மற்றும் விசேட அறிவு உள்ளவர்களில் இருந்து அமைச்சரினால் நியமிக்கப்படும் இருவர் ;

(2) மாகாணத்திற்கு உரிய மீனவ சமூகத்தினை அங்கத்துவப்படுத்தும் பிரதிநிதி ஒருவர் ;

(3) 1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, மீன் வளர்ப்பு நீரியல் வழங்கல் சட்டத்தின்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படும் அங்கத்தவர் ஒருவர் ;

(4) கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் அங்கத்துவம் பெறுமாறு அமைச்சரினால் நியமிக்கப்படும் மூன்று அங்கத்தவர்கள்.

(ii) I ஆம் அட்டவணையின் (1) ஆம் உப பிரிவின் கீழ் அமைச்சரினால் நியமிக்கப்படும் ஒருவர் ஆலோசனைச் சபையின் தவிசாளராக வேண்டும்.

ஆலோசனைச் செயற்குழுவின் பொறுப்புக்களும் கடமைகளும்.

7. ஆலோசனைச் செயற்குழுவினால் பின்வரும் விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் :

(1) மாகாண மீன்பிடி நடவடிக்கை மற்றும் மாகாண மீன்பிடி தொழிலினை அபிவிருத்தி செய்வது தொடர்பாக மாகாண அமைச்சரினால் ஆலோசனைச் செயற்குழுவிற்கு அனுப்பப்படும் விடயங்கள் தொடர்பாக மாகாண அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

(2) மாகாண மீன்பிடிக் கைத்தொழில் அபிவிருத்திக்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களுக்கு உரிய ஏற்பாடுகள்.

8. (1) ஆலோசனைச் செயற்குழுவின் ஒவ்வொரு நியமிக்கப்படும் அங்கத்தவரும் அவர் மரணமடைந்தால், இராஜினாமாச் செய்வதால் அல்லது அகற்றப்படுவதன் காரணமாக பதவியினைக் கைவிட்டாலொழிய மூன்று மாத காலத்திற்கு பதவி வகிக்க வேண்டியதுடன், ஒழுக்காற்றுச் செயற்பாடு காரணமாக அகற்றப்பட்டாலொழிய மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகைமையுடையவராக வேண்டும்.

(2) மாகாண அமைச்சரினால் அதனை அவ்வாறு செய்வது சிறந்தது எனக் கருதும் இடத்து நியமிக்கப்பட்ட அங்கத்தவரை காரணம் குறிப்பிடாது அகற்ற இயலும்.

(3) ஏதாவது நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவர் எவ்வேளையில் அது தொடர்பாக அமைச்சரினை விழித்துக் கடிதம் ஒன்றினை அனுப்பி பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ய முடிவதுடன் அந்த இராஜினாமா அமைச்சரினால் ஏற்றுக்கொண்ட பின் நடைமுறைக்கு வரும்.

(4) ஏதாவது நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவரின் மரணம், இராஜினாமா அல்லது பதவியில் இருந்து அகற்றப்படுதல் அல்லது பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பம் ஒன்றில் மாகாண அமைச்சரினால் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு அவருக்காக கடமையாற்றுவதற்காக வேறு ஒரு நபர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படுபவர் முன்னைய அங்கத்தவரின் மிகுதியாக உள்ள காலத்திற்கு பதவி வகிக்க வேண்டும்.

(5) ஆலோசனைச் செயற்குழுக் கூட்டத்திற்கு மூன்று தவணைகளுக்கு அறிவிப்பொன்றை விடுக்காது அங்கத்தவரொருவர் வருகை தராதவிடத்து ஆலோசனைச் செயற்குழுவில் அவரது அங்கத்துவம் இரத்தாகும்.

கூட்டங்களுக்கு வருகை தருவதற்கான படி.

9. ஆலோசனைச் செயற்குழுவின் அங்கத்தவர்கள் அச்செயற்குழுக் கூட்டங்களுக்கு வருகை தருவதற்காக மாகாண அமைச்சரினால் மாகாண நிதி விடயப் பொறுப்பு அமைச்சரினை வினவி தீர்மானிக்கப்படுவதைப் போன்று படியொன்று செலுத்தப்பட வேண்டும்.

விதிகளைத் தயாரிப்பதற்குரிய அதிகாரம்.

10.(1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் மீன்பிடிப் பணிப்பாளருக்கு உரிய விடயங்களை ஒழுங்கான முறையில் பேணிச் செல்லவும் அதனோடு தொடர்புடைய இடைநேர் விளைவான விடயங்களுக்காகவும் அமைச்சரினால் விதிகளைத் தயாரிக்க இயலும்.

(2) இப்பிரிவின் கீழ் அமைச்சரினால் தயாரிக்கப்படும் ஒவ்வொரு விதியும் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட பின் மூன்று மாத காலத்தினுள் அங்கீகாரத்திற்காக அவற்றை மாகாண சபையில் முன்வைக்கப்படல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் தயாரிக்கப்படும் விதிகள் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அங்கீகாரம் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலொன்றில் பிரசுரிக்கப்பட்ட பின்னர் இந்த விதிகள் அதிகாரத்திற்கு வர வேண்டும்.

11. பொதுவான ஏற்பாடுகள் -

*உட்செல்வதற்கும் மற்றும் பரிசோதித்துப் பார்ப்பதற்கும் உள்ள அதிகாரம்.*

(1) மாகாண மீன்பிடிப் பணிப்பாளரின் எழுத்து மூலமான அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற ஏதாவதொரு நபரொருவரினால் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்தும் விடயங்களுக்காக பகல் அல்லது இரவு நேரங்களில் எவ்வேளையிலும் முன்னறிவித்தலொன்று இல்லாது ஏதாவதொரு இடங்களுக்கும் உட்சென்று-

(அ) அந்தச் சுற்றாடலைப் பரிசோதித்துப் பார்க்க ;

(ஆ) அந்தச் சுற்றாடலில் மீன் வகை, உபகரணங்கள் ஆகியவற்றைப் பரிசோதித்துப் பார்த்தல், அவற்றின் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல், அவற்றில் பாவனைக்கு உதவாத மீன் வகைகள், பிற பொருட்கள் அல்லது சட்ட ரீதியற்ற உபகரணங்கள் போன்றன இருந்தால் அவற்றினைக் கைப்பற்றிக்கொள்ள ;

(இ) அங்கு காணப்படும் எந்தவொரு நபரினையும் விசாரணை செய்ய ;

(ஈ) அதனுள் பேணிச் செல்லப்படும் ஏதாவதொரு பதிவேடு அல்லது அறிக்கைகளைப் பரிசோதித்தல் மற்றும் அப்பதிவேடுகளில், அறிக்கைகளில் நிழற்படப் பிரதிகளை எடுக்க ; அத்துடன்

(உ) அந்தச் சுற்றாடலுக்குப் பொறுப்பாகவுள்ள ஏதாவதொரு நபரொருவருக்கு இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கத் தேவையான அம்சங்களை மேற்கொள்ள பணிப்பினைச் செய்ய முடியும்.

*மாகாண மீன்பிடிப் பணிப்பாளரினால் பொலிசாரின் உதவியினைப் பெற்றுக்கொள்ளல்.*

12. (1) இந்நியதிச் சட்டத்தின்கீழ் விடயங்கள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொண்டு செல்வதற்காக மாகாண மீன்பிடிப் பணிப்பாளருக்கு பொலிசாரின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் அந்த ஒத்துழைப்பினை வழங்குவது பொலிசாரின் பொறுப்பாகும்.

13. தவறுகளும் தண்டனைகளும் :

*நச்சுப் பொருட்கள் அல்லது வெடிபொருட்களைப் பயன்படுத்தி மீன்களைப் பிடித்தல், விற்பனை என்பன தவறொன்றாகும்.*

(1) ஏதாவதொரு நபரொருவரினால்-

(அ) மேல் மாகாணத்தின் கடற்பகுதிகளில் மற்றும் உள்நாட்டு நீர்த்தேக்கங்களில் மீன்களைப் பிடிக்கும்போது அல்லது பிற நீர்வளங்களைப் பெற்றுக்கொள்ளும்போது நச்சுப் பொருட்கள், வெடிபொருட்களை அல்லது நச்சுத் தன்மையாக்கும் திரவியங்களைப் பயன்படுத்துவது அல்லது பயன்படுத்த முயற்சிப்பது மேற்கொள்ளக் கூடாது.

(ஆ) (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது விடயத்திற்காக விசமுள்ள வெடி மருந்து அல்லது நச்சுத் தன்மையாக மாற்றும் ஏதாவதொரு பொருளொன்றைப் பயன்படுத்தியது என்ற எண்ணத்திற்காகச் செய்யப்படும் ஆராய்ச்சியின்கீழ் அவ்வாறான விசமுள்ள வெடிமருந்து அல்லது நச்சுத்தன்மையாக மாற்றும் ஏதாவது பொருளொன்றைக் கொண்டு செல்வது அல்லது தமது பொறுப்பில் வைத்திருப்பதைச் செய்யக் கூடாது.

(இ) ஏதாவது மீனொன்று அல்லது பிற நீர்வளமொன்று விஷம், வெடிமருந்து அல்லது நச்சுத்தன்மையாக்கும் ஏதாவது திரவியமொன்றைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளதென தெரியவந்தால் அவ்வாறு நம்புவதற்கு காரணமொன்று இருந்தால் அவ்வாறான ஏதாவதொரு மீனொன்றை அல்லது ஏதாவது நீர்வளமொன்றை எடுப்பது, விற்பது, காசுக்கு வாங்குவது, பொறுப்பில் வைத்திருப்பது கூடாது.

(ஈ) விஷமுள்ள வெடிமருந்து அல்லது நச்சுத்தன்மையாக மாற்றும் பொருளொன்றை மேல் மாகாணத்தின் கடற்பகுதிகளில் மற்றும் உள்நாட்டு நீர்த்தேக்கங்களில் இடுவது, வைத்திருப்பது, இடுவது அல்லது வெளியேற்றச் செய்வதை மேற்கொள்ளக் கூடாது.

(உ) தடை செய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்கள் எவற்றையும் மேல் மாகாணத்தின் மீன்பிடி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவது அல்லது தமது பொறுப்பில் வைத்திருப்பது அல்லது ஏதாவதொரு மீன்பிடிப் படகில் வைத்திருப்பது அல்லது தடைசெய்யப்பட்ட மீன்பிடிக்கும் முறைகளைப் பயன்படுத்துவது எந்தவொரு நபரினாலும் மேற்கொள்ளப்படக் கூடாது.

(ஊ) மேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள உள்நாட்டு நீர்த்தேக்கங்களின் எந்தவொரு பகுதியிலும் மூன்றரை அங்குலத்திற்கும் குறைந்த (3 1/2 அங்குலம்) கண்ணுள்ள எந்தவொரு வலையொன்றினாலும் மீன்பிடிப்பது மேற்கொள்ளப்படக் கூடாது.

(2) இந்தப் பிரிவின் ஏற்பாடுகளை மீறும் ஒவ்வொரு நபரும் குற்றமொன்றுக்கு குற்றவாளியாகுவதுடன் மாஜிஸ்திரேட் ஒருவரின் முன்னிலையில் நடைபெறும் சுருக்க முறையான விசாரணையின் பின் குற்றவாளியாகக் காணப்பட்டால் பத்தாயிரம் ரூபா தண்டத்திற்கு அல்லது ஆறு மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கான சிறைத்தண்டனைக்கு அல்லது இவற்றில் இரு முறையிலும் ஒரு முறையில் சிறைத்தண்டனை அல்லது தண்டம் ஆகிய இரண்டிற்கும் உட்படல் வேண்டும்.

பயன்பாட்டிற்கு உதவாத மீன்களை விற்பது குற்றங்கள் ஆகும்.

14. (1)ஏதாவதொரு நபரொருவரினால் மேல் மாகாணத்தினுள்–

(அ) நச்சுத் தன்மை வாய்ந்த அல்லது காலாவதியான அல்லது மனித பாவனைக்கு உகந்ததல்லாத மீன்வகையொன்று அல்லது மீன் உற்பத்தியொன்றை விற்றல், விற்பதற்காக வைத்திருத்தல் அல்லது உற்பத்தி செய்தல்.

(ஆ) மீன் அல்லது மீன் வகையொன்றை அதிக காலம் வைத்திருத்தல், உற்பத்திக்காக நச்சுத்தன்மை வாய்ந்த அல்லது மனித பாவனைக்கு உகந்ததல்லாத பொருளொன்றைப் பயன்படுத்துவது கூடாது.

(2) (1) முதலாவது உப பிரிவின்கீழ் ஏதாவதொரு ஏற்பாடொன்றை மீறும் ஏதாவது நபரொருவர் குற்றமொன்றுக்கு குற்றவாளியாகுவதுடன் மாஜிஸ்திரேட் ஒருவரின் முன்னிலையில் நடைபெறும் சுருக்க முறையான விசாரணையின் பின் குற்றவாளியாகக் காணப்பட்டால் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத தண்டத்திற்கு அல்லது ஆறு மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கான சிறைத்தண்டனைக்கு அல்லது இவற்றில் இரு முறையிலும் ஒரு முறையில் சிறைத்தண்டனை அல்லது தண்டம் ஆகிய இரண்டிற்கும் உட்படல் வேண்டும்.

பிற தவறுகள்.

15. (1) (அ) இந்நியதிச் சட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட விதியின்கீழ் தமது அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் நபரொருவருக்கு ஏதாவதொரு நீதியான காரணமொன்று இல்லாது இடையூறொன்றை ஏற்படுத்தும் ;

(ஆ) இந்நியதிச் சட்டத்தின் அதிகாரத்தின்கீழ் செயற்படும் நபரொருவராக இந்நியதிச் சட்டத்தின் கீழேயான ஏதாவதொரு அதிகாரமொன்றை அல்லது நடவடிக்கையொன்றை நடைமுறைப்படுத்தும்போது அல்லது மேற்கொள்ளும்போது பிறருக்குஅழுத்தம் ஏற்படும் முறையில் அல்லது பிறருக்கு ஆத்திரமூட்டும் வகையில் நடக்கும் அல்லது செயற்படும் ;

(இ) இந்நியதிச் சட்டத்தின்கீழ் செயற்படும் நபரொருவராக இந்நியதிச் சட்டத்தின்கீழ் தமது அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தும்போது அல்லது தனது பொறுப்பினை செய்யும்போது அதனோடு தொடர்புடையதாக தமக்குக் கிடைத்த தகவல் ஒன்றை, அந்த தகவலை வெளியிடுவதற்காக இந்நியதிச் சட்டத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள விடயத்தினைத் தவிர, பிற விடயமொன்றிற்காக ஏதாவதொரு நபரொருவருக்கு வெளியிடும் ;

(ஈ) இந்நியதிச் சட்டத்தின்கீழ் தமக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ஏதாவது கட்டளைக்கு இணங்க செயற்பட்டு முன்வைக்கப்பட வேண்டிய ஏதாவது அறிக்கையொன்றை அல்லது ஏதாவது தகவலொன்றை முன்வைக்க இயலாமல் போகும் அல்லது தன்னால் முன்வைக்கப்படும் ஏதாவது அறிக்கையொன்றின் மூலம் அல்லது தகவலொன்றின் மூலம் தெரிந்தே பொய்யான தகவலொன்றை அல்லது,

(உ) இந்நியதிச் சட்டம் அல்லது அதன்கீழ் தயாரிக்கப்படும் ஏதாவது கட்டளையொன்றை அல்லது ஏதாவது ஏற்பாடொன்றை மீறுகின்ற அல்லது இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடொன்றினால் தமக்கு வழங்கப்படும் ஏதாவது கட்டளையொன்றைக் கடைப்பிடிக்கத் தவறும் ஒவ்வொரு நபரும் இந்நியதிச் சட்டத்தின்கீழ் குற்றமொன்றிற்கு குற்றவாளியாக வேண்டும்.

(2) (அ) (1) ஆம் உப பிரிவின்கீழ் தவறு செய்யும் அல்லது இந்நியதிச் சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் தயாரிக்கப்பட்ட ஏதாவது கட்டளையொன்றின்கீழ் அல்லது தண்டனையொன்று என வெளியிடப்படாத ஏதாவது தவறொன்றைச் செய்யும் நபரொருவர் குற்றமொன்றுக்கு குற்றவாளியாகுவதுடன் மாஜிஸ்திரேட் ஒருவரின் முன்னிலையில் நடைபெறும் சுருக்கமுறையான விசாரணையின் பின் குற்றவாளியாகக் காணப்பட்டால் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத தண்டத்திற்கு அல்லது ஆறு மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கான சிறைத்தண்டனைக்கு அல்லது இவற்றில் இரு முறையிலும் ஒரு முறையில் சிறைத்தண்டனை அல்லது தண்டம் ஆகிய இரண்டிற்கும் உட்படல் வேண்டும்.

(3) இந்நியதிச் சட்டத்தின் கீழேயான தவறொன்றை ஏதாவது குழுவொன்றால் மேற்கொள்ளப்படுமிடத்து,-

(அ) அக்குழுவானது கூட்டுத்தாபனமொன்றாயின் அக்கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பணிப்பாளரும் அத்துடன் உரிய உத்தியோகத்தர் ஒருவரும் ;

(ஆ) அந்தக் குழுவானது வியாபார தாபனமொன்றாயின் அந்த வியாபார தாபனத்தின் ஒவ்வொரு பங்குதாரரும் அத்தவறிற்கு குற்றவாளியாகக் கருதப்பட வேண்டும்.

எவ்வாறானபோதும் அத்தவறானது அந்தப் பணிப்பாளர் அல்லது உத்தியோகத்தர் அல்லது அந்த வியாபார தாபனத்தின் பங்குதாரர் தாம் அறியாமல் அந்தத் தவறைச் செய்துள்ளாரென அல்லது அந்தத் தவறு இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்கு தம்மால் ஒழுங்கான முறையில் செயற்பட்டதை நிரூபித்தால் அவரை அத்தவறிற்கு குற்றவாளியாகக் கருதக்கூடாது.

(4) பணிப்பாளரின் எழுத்து மூலமான அங்கீகாரமொன்று கிடைக்கப்பெற்ற உத்தியோகத்தரொருவர் அல்லது ஊழியரொருவர் இந்நியதிச் சட்டத்தின்கீழ் தவறொன்று தொடர்பான வழக்கு நடவடிக்கைகளின் விடயங்களுக்காக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்கு ஏற்பாட்டுச் சட்டத்தின் பொருள்கொள்ளலுக்கு இணங்க அரச உத்தியோகத்தர் ஒருவராகக் கருதப்பட வேண்டும்.

*தண்டப்பணத்தினை மாகாண சபை நிதியத்திற்குச் செலுத்த வேண்டும்.*

16. இந்நியதிச் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட தவறொன்று தொடர்பாகப் பணிக்கப்படும் தண்டப்பணம் மாகாண சபை நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

*பொருள் கொள்ளல்.*

17. பொருள்கொள்ளல் ஒன்று தேவைப்பட்டாலொழிய இந்நியதிச் சட்டத்தின் விடயங்களுக்காக-

"அமைச்சர்" என்பது, மேல் மாகாணத்தின் மீன்பிடி விடயப்பொறுப்பு அமைச்சர் என்ற கருத்தாகும் ;

"உள்நாட்டு நீர் நிலைகள்" என்பது, மேல் மாகாணத்தின் நிலப் பிரதேசத்தில் அமைந்துள்ள கங்கை, ஆறு, குளம், கால்வாய் வழி, நீரூற்று, பிற ஏதாவது பொது நன்னீர் நீர்நிலை என்ற கருத்தாகும் ;

"நீர் வளங்கள்" என்பது, நீர் வாழ் உயிரினங்கள், ஊடகம் கடல், மிதவை உயிரினங்கள் மற்றும் மற்ற நீர்வாழ் ஆலைத் தாவர வகைகள் காணப்படும் நீர்வாழ் தாவரங்கள் மற்றும் உயிரற்ற பொருட்கள் கட்டமைப்பாக வரையறை செய்யப்படும். இது கடற்பாசி, தாவர தாவரங்கள் அல்லது பிற நீர்வாழ் தாவரங்கள் மற்றும் பிற நீர்நிலைகளில் உள்ள பொருட்கள் என்ற கருத்தாகும் ;

''நீர்வாழ் உயிரின கருத்திட்டம்'' என்பது, உற்பத்தியை அதிகரிக்கும் விடயத்திற்காக மனிதக் கட்டுப்பாட்டுக்குள் நீர்நிலை இனங்களின் வாழ்விடங்களில் இருந்து மீன் வளர்ப்பு மற்றும் உயிரினங்களின் உயிர் சுழற்சியின் குறைந்தபட்சம் ஒரு கட்டத்தின் எல்லைக்குள் தொடர்புபட்டுள்ள நீர்வாழ் தாவரங்களையும் உயிரினங்களையும் உற்பத்தி செய்தல் என்ற கருத்தாகும் ;

"மீன்கள்" என்பது, மீன் வகைக்கு உட்படும் அல்லது உட்படாத ஏதாவதொரு நீர்வாழ் உயிரினமொன்று என்ற கருத்தாகுவதுடன் ஏதாவது ஓட்டினைக் கொண்ட மீன் வகையொன்று அல்லது கோதினைக் கொண்ட மீன் வகையொன்று அல்லது முத்துச்சிப்பி அல்லது நீர்ப்பாசி வகை அத்துடன் அவற்றின் குஞ்சுகள் மற்றும் முட்டைகள், நீர்வாழ் பாலூட்டிகள் என்ற கருத்தாகும் ;

"மாகாணம்" என்பது, மேல் மாகாணம் என்ற கருத்தாகும் ;

"மாகாண மீன்பிடி பணிப்பாளர்" என்பது, மேல் மாகாணத்தின் மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை பணிப்பாளர் என்ற கருத்தாகும் ;

"செயலாளர்" என்பது, மேல் மாகாணத்தின் மீன்பிடி விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளர் என்ற கருத்தாகும்.

07-926

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.